**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 420/2023**

திருமதி.தாமரைசெல்வி (P.W. –1) **06.04.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய மாத வருமானம் என்ன என்றால் 25 ஆயிரம். என்னுடைய வருமானம் வங்கிக் கணக்கின் மூலம் தான் எனக்கு கிடைக்கப்பெறும் என்றால் ஆமாம். தாவா கடன் தொகையான ரூபாய் 5 லட்சம் கடன் கொடுத்த தேதியில் எனக்கு எப்படி வந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்னுடைய தகப்பனாரின் சொத்துக்களை அடமானம் வைத்துக் கொடுத்தேன். எந்த தேதியில் அடமானம் வைத்தேன் என்றால் 10.11.2022 இல் அடகு வைத்தேன்.

2. என்னுடைய தகப்பனாரின் சொத்துக்களை அடமானம் வைத்து கடன் கொடுத்ததாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. அம்மாதிரி அடமானம் வைத்ததாக சொல்லும் சங்கதிகளை பொறுத்து எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. தாவா கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள சென்னியம்மாள் மற்றும் செல்வி எனக்கு எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் ஆறு வருடங்களாக பழக்கம். நானும் சாட்சிகளும் ஒரே பகுதியில் வசித்து வருகிறோம் என்றால் சரி.

3. தாவா கடனுறுதி சீட்டை யார் எழுதினார்கள் என்றால் கலெக்டர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் செந்தில் என்பவர் எழுதினார். இந்த விவரத்தை தாவா வழக்குரையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரி. செந்திலை அழைத்துத்தான் எழுதினோம். தாவா கடனுறுதி சீட்டு செந்திலால் எழுதப்பட்டு

அதன் பிறகு சாட்சியங்கள் கையொப்பம் செய்யப்பட்டதா என்றால் சரி. செந்தில் கடனுறுதி சீட்டை எழுதி சாட்சி கையொப்பங்கள் ஏற்படுத்திய பிறகு தான் கடன் கொடுத்தேன். கடனுறுதி சீட்டில் வட்டி விவரங்கள் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். 12 சதவீதம் வருடத்திற்கு என்று எழுதப்பட்டுள்ளது.

4. கடனுறுதி சீட்டில் இடது கை பெருவிரல் ரேகை என்ற இடத்தில் ரேகை பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கடனுறுதி சீட்டில் மூர்த்தி மனைவி செல்வி எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. பிரதிவாதியிடம் இருந்து பணம் பெற வேண்டி நானும் சாட்சிகளும் தாவா கடனுறுதி சீட்டை மோசடியாக ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு. அதனால் தான் தாவா கடனுறுதி சீட்டில் எழுதியது செந்தில் என்று தற்போதும் தாவா தாக்கல் செய்த போது தாவா கடனுறுதி சீட்டில் செல்வி எழுதியதாக உள்ளது, முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. பிரதிவாதியின் ஆதார் அட்டை, வருமான வரி அட்டை, குடும்ப அட்டை ஆகியவை கடன் பெற்ற போது கொடுத்ததாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அறிமுகப்படுத்திய சத்யாவிடம் கடன் வங்கியில் பெறுவதற்காக கொடுக்கப்பட்ட ஆவணங்களை மோசடியாக வழக்கிற்கு பயன்படுத்தி உள்ளீர்கள் என்றால் தவறு.

5. கடன் பெற்று தருவதாக சொன்ன சமயத்தில் பிரதிவாதி காசோலை வங்கி பாஸ்புத்தகம் ஆகியவற்றை கொடுத்திருந்தார். அதை மோசடியாக பயன்படுத்தியுள்ளார் என்றால் தவறு. காசோலையை எப்போது கொடுத்திருந்தார் என்றால் 5 லட்சம் என்று நிரப்பி 04.10.2023 ல் கொடுத்தார். அதற்கு முன்பு பிரதிவாதி எனக்கு ரூ.1,06,650/- gpay மூலம் செலுத்தியுள்ளார் என்றால் சரி. என்னிடம் அவ்வப்போது தொகையைப் பற்றி திருப்பி செலுத்துவார். ஏற்கனவே கடன் தொகை திருப்பி செலுத்திய பிறகு ரூ.5 லட்சத்திற்கு காசோலை பிரதிவாதி என்னிடம் கொடுப்பதற்கே வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. முதலில் கொடுத்த கடன் திருப்பி செலுத்தியதன் நம்பிக்கையின் பெயரில் கடன் கொடுத்தேன். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு பணத்தை திருப்பி செலுத்தும் படி பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாததற்கு

காரணம் என்ன என்று தாவா வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் தவறு அறிவிப்பு அனுப்பி இருப்பார்.

6. அம்மாதிரி சட்ட அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு அவசரகதியில் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு மோசடியான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. பிரதிவாதி என்னிடம் ரூ.70000/- கடன் பெற்று அந்த தொகையை திருப்பி வட்டியுடன் செலுத்தி விட்டார் என்றால் சரி. அந்த கடன் அவ்வப்போது பெறுவார் அதை திருப்பி செலுத்தி உள்ளார். அதற்கு ஆதரவாக வெற்று கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணங்களை மோசடியாக நிரப்பி எந்த ஒரு கடனும் கொடுக்காமல் பொய் தாவா தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

7. பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை என்றால் ஆமாம். பிரதிவாதி தரப்பில் யாரும் கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. அவருடைய மகன் மகளுடன் தான் கடன் பெற்றார். தாவா பரிகாரங்கள் பெற எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. தாவா கடலூரில் சீட்டு மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்பதால் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.04.06 18:35:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.